D E P O S I T I O N   O F   W I T N E S S
( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,
THIRUKALUKUNDRAM.

Case No. STC.43/2021

**P.W**.1

| | |
|---|---|
| Name | : **திரு.காளிதாஸ்** |
| Father/Husband Name | : திரு.குப்புசாமி |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.12.2022

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது பொம்மராஜபுரம் கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன்.

2) நான் நெரும்பூரில் உள்ள எனக்கு சொந்தமான நிலத்தில் 1 வது எதிரியிடம் டிராக்டரை வாடகைக்கு பெற்று உழுது கொண்டு இருந்தேன். அதில் கொஞ்சம் பாக்கி தொகை தரவேண்டி இருந்தது. 18.2.2019 அன்று 1 வது எதிரி சண்முகம் என்னிடம் வந்து பாக்கி தொகையை கேட்டார். நான் 10 நாள் அவகாசம் கேட்டேன். அதன்பிறகு 24.2.2019 அன்று சுமார் இரவு 7.30 மணியளவில் நான் என்னுடைய நிலத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் மூன்று பேரும் அங்கு வந்து பணத்தை திருப்பி கேட்டார்கள். அப்போது ஒத்தா பணம் தரமாட்டாயா உன்னை தேடி வந்து பணம் கேட்கவேண்டுமா என்று எதிரிகள் மூவரும் என்னை அவதூறாக பேசினார்கள். நான் காலை 10.00 மணிக்கு வந்து

பணம் தருகிறேன் என்று சொன்னேன். அதற்கு எதிரிகள் மூவரும் கையால் எனது முகததில் மாறி மாறி அடித்து கீழே தள்ளி மார்பு மீது எட்டி உதைத்தார்கள். அதனால் எனக்கு தற்போது வரை வலது கண் பார்வை சரியாக தெரியவில்லை. இது குறித்து நான் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்துவிட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை,**

நெரும்பூர் காலணியில் எனக்கு சொந்தமாக நிலம் இருப்பதாக காட்டும் ஆவணம் எதையும் விசாரணையின் போது போலிசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கும், காவல் நிலையத்திற்கும் இடையே சுமார் 15.கி.மீட்டர் தூரம் இருக்கும். காவல் நிலையத்திற்கு நாங்கள் இரண்டு, மூன்று பேராக சென்றோமா என்றால் இல்லை. நானும், ஆட்டோ டிரைவரும் தான் சென்றோம். எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்று சரியாக நினைவில்லை. நான் சம்பவத்திற்கு மறுநாள் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அன்றே கொடுத்தேன். 15 கி.மீட்டர் தூரம் உள்ளதால் சுமார் 11.00 மணியளவில் காவல் நிலையம் சென்றிருப்பேனா என்றால் இல்லை. அரைமணி நேரத்தில் சென்று விட்டேன். புகார் மனுவில் நான் தான் கையெழுதது செய்தேன். புகாரை அங்கிருந்த வழக்கறிஞர் எழுதினார். காவல் நிலையத்தில் வைத்து தான் எழுதினார். அந்த வழக்கறிஞரை காவல்

நிலையத்திற்கு நான் வரசொன்னேனா என்றால் ஆமாம். வழக்கறிஞர் எழுதிய மனுவில் நான் கையெழுத்து மட்டும் போட்டேனா என்றால் நான் சொல்லியதை அவர் எழுதினார் நான் கையெழுத்து போட்டேன். எதிரிகளுக்கும், எனக்கும் சுமார் 4 வருடங்களாக முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. தாங்கல் ஏரி அருகில் எதிரிகளுக்கு சொந்தமாக நிலம் உள்ளது என்றால் தெரியாது.

18.2.2019 அன்று எதிரிகள் என்னிடம் பணத்தை திருப்பி கேட்டதாக புகாரிலோ, போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் அவர்கள் கேட்கவில்லை, அதனால் நான் சொல்லவில்லை. போலிசார் காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. எதிரிக்கு தரவேண்டிய பாக்கி தொகை குறித்த பின் விவரங்களை நான் புகாரிலோ, போலிஸ் விசாரணையிலோ சொல்லவில்லை. அதற்கு தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை. நான் பொம்மராஜபுரத்தில் குடியிருக்கிறேன். ஒரு ஆறுமுகம் என்பவருக்கும், எனக்குமிடையே நிலத்தகராறு சம்பந்தமாக இதே நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆறுமுகத்திற்கு, சேகர் மற்றும் சின்னபையன் ஆகியோர் சொத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் போர்ஜரியாக விற்பனை செய்துள்ளார்கள். ஏற்கனவே இருசன் என்பவருடன் நிலத்தகராறு உள்ளது என்றாலும் அதில் என் மீது வழக்கு உள்ளது என்றாலும் சரிதான். நான் பாக்கி தொகையை கொடுக்காமல் தவிர்ப்பதற்காக இந்த புகாரை அளித்துள்ளேன் என்றால்சரியல்ல. சம்பவம் உண்மையாக இருந்தால் பாக்கி தொகை குறித்த மொத்த விவரங்களையும் புகாரில் சொல்லியிருப்பேன் என்றால்சரியல்ல. நெரும்பூரில் எனக்கு

சொந்தமாக நிலம் கிடையாது என்றால் சரியல்ல. எதிரிகளை பழிவாங்க வேண்டி வழக்கறிஞரை வைத்து புகாரை ஜோடித்துள்ளேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் எந்த தேதியில் சேர்ந்து எந்த தேதியில் டிஸ்சார்ஜ் ஆனேன் என்று போலிஸ் விசாரணையில சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. உள்காயம் ஏற்பட்டதாக மருத்துவரிடம் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் கண்டவாறு சம்பவம் நடக்கவில்லை என்றாலும் பாக்கி தொகையை கொடுப்பதை தவிர்க்க வேண்டி பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பாக்கி தொகையை திருப்பி செலுத்திவிட்டேனா என்றால் இல்லை. எதனால் கொடுக்கவில்லை என்றால் வழக்கு முடிந்த பிறகு கொடுக்கலாம் என்று இருக்கிறேன். பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Certified that the examination of the accused was taken by me and that the records contains full and true on account of the statement made by him/her. It has been read over to him/her and admitted by him/her to be correct.

Sd/-A.Kadhiravan,
J.M/TKM.